# சரிகமபதநி டைரி 2013



சுதா ரகுநாதன்



மேண்டோலின் ஸ்ரீனிவாஸ்



சஞ்சய் சுப்ரமணியன்



சாருலதா மணி

### ரதகான சபாவில் சுதா ரகுநாதன்

நா பத்தரை மாற்றுப் பொன்னால நகைகள் அணிந்துகொண்டு, சரி ஆடைகளை அழகு ததும்ப உடுத் கருணையுடன் அனைவரைய நோக்கி... என்றெல்லாம் சிலாகித்து தியாகரா தன் வீட்டுக்கு அழைக்கும் *'ஸ்ரீதுலசம்மா'*வ (தேவகாந்தாரி) பாடுவதற்கு முன் சுதாம் விரிவுபடுத்தி வெளுத்துக்கட்டியது கரகரப்ரியான

ஒரு பக்கம் கனமான சங்கதிகள்... இன்னொ பக்கம் ஜி.என்.பி., எம்.எல்.வி. காலத்துப் பிடிக நடுநடுவே அரங்கம் முழுவதும் கோலிக்குண் களாக உருண்டோடிய பிருகாக்கள்... ஆர்ப்பாட் மான ஆலாபனை! வயலினில் ராகவேந்திர ரா தன் பங்குக்கு கரகரப்ரியாவில் கோட்டை எழுப் விளையாட... பாபநாசம் சிவனின் *'ஸ்ரீனிவாச த சரணம்'* பாடலை நிரவல், ஸ்வரங்களுடன் சுத் தோரணம் கட்டி முடித்து 'தனி'க்கு விட்டபோ (திருவாரூர் வைத்தியநாதன்-என்.குருபிரசா ஆடியன்ஸுடன் சேர்ந்து கணவர் ரகுவ கைதட்டி மகிழ்ந்தார்!

அடுத்து, அந்திசாயும் வேளையில் ஹம்சானந் இந்த ராகத்தில் பாடகி கொடுத்த அசைவுகளு வல்லின மெல்லினங்களுடன் மாடுலேஷனும் சும்மா ஜில். *'தேவி ஸ்ரீ உமா மகேஸ்வரி பால திரிபுர சுந்தரி நீ தயை புரி'* என்பது பல்லவிக்கான வரி. ஸ்வர ராகமாலிகையில் அடாணாவும் ஆனந்த பைரவியும் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து வந்தன.

தேவி தயை புரிந்திருக்காவிட்டால் சுதா இத்தனை உயரம் தொட்டிருக்க முடியுமா என்ன!

### 'சென்னையில் திருவையாறு' நிகழ்ச்சியில் சாருலதா மணி!

மற்ற சபா சூழலில் இருந்து மாறுபட்டு இசை விழா நடத்துகிறது லஷ்மன் ஸ்ருதியின் சென்னையில் திருவையாறு. மாநகரச் சுவர்களை போஸ்டர்களால் மறைத்துவிடுகிறார்கள். ஸ்பெஷல் மசால் தோசை நீளத்துக்கு நுழைவு டிக்கெட். காமராஜர் அரங்கில் நுழையும்போதே எக்ஸிபிஷன் உணர்வு. லாபி முழுக்க ஸ்டால்கள். பிட் நோட்டீஸ்களை கைகளில் திணித்து விடுகிறார்கள். மிளகாய்த் தூள் தூவிய பெரிய சைஸ் அப்பளம்தான் மிஸ்ஸிங்!

முதல் கச்சேரிக்கான பரிசுக் கூப்பன்களில் இருந்து பரிசுக்கானவற்றை தேர்வு செய்த பின், 'உங்கள் அபிமான பாடகி சாருலதா மணி அவர்களின் இசை நிகழ்ச்சி சில நிமிடங்களில் தொடங்கும்' என்று அறிவிப்பு.

மேடை ஏறினோம், பாடினோம், அடுத்த வேலை பார்க்கப் போனோம் என்ற ரகம் அல்ல சாருலதா. தான் பாடுவது பாமரர்களுக்கும் புரிய வேண்டும் என்பதில் ரொம்பவே மெனக்கெடுகிறார். உதாரணமாக, பிருந்தாவன சாரங்காவில் *'ரங்கபுரவிஹார'*வை ஆரம்பிப்பதற்கு முன், அந்த ராகத்தைப் பற்றி, சினிமாவில் அந்த ராகத்தில் மெட்டமைக்கப்பட்ட பாடல் பற்றி (பொன் ஒன்று கண்டேன்) எல்லாம் விரிவாக வகுப்பு எடுக்கிறார். அதே மாதிரி பந்துவராளி, சலநாட்டை, காம்போதி ராகப் பாடல்களுக்கும்.

நாம் பாடுவது ஏதோ ஒருவகையில் பயன்பட வேண்டும் இல்லீங்களா?

### கலாரசனாவில் சஞ்சய் சுப்ரமணியன்

பேகடா வர்ணத்தில் வார்ம்-அப் செய்துகொண்டு, *'கீசுகீசென்றெங்கும்'* திருப்பாவையில் *'ஓசைப் படுத்தத் தாயரவம் கேட்டிலையோ'* வரியில் ஓசையைப் பல்வேறு பைரவி சங்கதிகள் மூலம் வித்தியாசப்படுத்திக் காட்டுவிட்டு,

www.vikatan.com